# கல்லூரி ஆண்டறிக்கை 2021 – 2022

## முனைவர் இரா. இராமன், முதல்வர்

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் எம். கே. மோகன் அவர்களே! 2021 - 2022 ஆம் கல்வியாண்டில் கல்லூரி நிகழ்வுகளை ஆண்டு அறிக்கையாகத் தங்கள் முன்பு வாசிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அரசின் தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள், உயர் கல்வித்துறைச் செயலாளர் அவர்கள் ஆகியோர்களுடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றியும் கல்லூரி நிருவாகம் செயல்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கல்லூரிக்கு வருகை புரிந்து மரம் நடும் விழாவைத் தொடக்கி வைத்தும் மாணவர்களிடயே கலந்துரையாடியும் சிறப்பித்தார்கள். மேலும், அவர்களுடைய வழிகாட்டுதலின்படி இந்தக் கல்வி ஆண்டில் 20 சதவீதம் மாணவர்கள் அனைத்துத் துறையிலும் சேர்க்கப் பெற்றுக் கல்வி பயின்று வருகின்றனர் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் கல்லூரிக்கு வருகைபுரிந்து கொரானா தடுப்பூசி முகாமை தொடங்கி வைத்தார். பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் அனைவரும் அரசின் உரிய வழிகாட்டுதலின்படி கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைநகரில் தனித்துவம் மிக்க இந்த மாநிலக் கல்லூரியில் கலை மற்றும் அறிவியல் சார்ந்த 25 துறைகளில் சற்றேறக்குறைய ஐயாயிரம் மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஆசியாவிலேயே மாநிலக் கல்லூரியில்தான் காதுகேளாதோர் வாய் பேசாதோர்க்கான தனியாகப் பட்ட வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

2022 – 2023ஆம் கல்வியாண்டிலிருந்து காது கேளாதோர் வாய் பேசாதோர்க்கான முதுநிலை வணிகவியல் படிப்பினைத் தொடங்குவதற்கு அனுமதி நல்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ்த்துறை**

தமிழ்த்துறையில் வாரக் கருத்தரங்குகள் ஆறும் மாதக் கருத்தரங்குகள் எட்டும் நடைபெற்றுள்ளன. மேலும், "தமிழ் நவீன இலக்கியங்களில் பெண்கள்" என்ற தலைப்பில் 28.03.2022, 29.03.2022 ஆகிய இரு நாள்களில் தமிழ்த்துறைத் தலைவரின் தலைமையில் முனைவர் த. மோகன்தாஸ், முனைவர் சி. குமார் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப் பெற்றது. அக்கருத்தரங்கின் முந்நூறு ஆய்வுக்கட்டுரைகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டது. பாவேந்தர் பாரதிதாசனைப் போற்றும் வகையில், 29.04.2022 அன்று "பாரதிதாசன் படைப்புகள்" என்ற பொருண்மையில் முனைவர் இரா. பசுபதி, பேரா. கெ. குமார் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப் பெற்றது.

இந்தக் கல்வியாண்டில் முனைவர் பட்டத்திற்கான பொது வாய்மொழித் தேர்வுகள் நடத்தப்பெற்றுப் பதினெட்டு ஆய்வாளர்கள் முனைவர் பட்டம் பெற்றனர். தமிழ்த்துறைப் பேராசிரியர் ப. தாமரைக்கண்ணன் சென்னை பாரதி மகளிர் கல்லூரி, காயிதேமில்லத் கல்லூரி மற்றும் இந்து கல்லூரியில் பணி மேம்பாட்டுக் குழு (CAS) கூட்டத்தில் பங்கேற்றுள்ளார். டாக்டர் அம்பேத்கர் கல்லூரியில் பாடத்திட்டக் குழு உறுப்பினராக இருந்து வருகிறார். மேலும், தமிழ்நாடு அரசு குடிமைப்பணித் தேர்வு மையத்தில் மாதிரி நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டுள்ளார்.

தமிழ்த்துறைப் பேராசிரியர் க. சேகர் நமது மாநிலக் கல்லூரியின் கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராகப் பணி மேம்பாடு பெற்றுள்ளார். பேராசிரியர் சி. குமார் 2021 ஆம் ஆண்டில் 'சிலம்பொலிச் செம்மல் விருது' பெற்றுள்ளார். மேலும், கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலராக இருந்து திருமழிசையில் ஏழு நாள் சிறப்பு முகாம் நடத்தியுள்ளார். கேரளாவில் நடைபெற்ற தொல்காப்பியப் பயிலரங்கத்தில் பேராசிரியர்கள் த. காமராஜ், த. மோகன்தாஸ், சி. குமார் ஆகியோர் பங்கேற்றனர். இந்தக் கல்வி ஆண்டின் முத்தமிழ் விழா 25.05.2022 அன்று சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், 60 முனைவர் பட்ட மாணவர்களுக்கு நெறியாளர்களாக வழிகாட்டி வருகின்றனர்.

## ஆங்கிலத் துறை

ஆங்கிலத்துறையில் 2021-22 ‘Cross Cultural Approach’ என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறைப் பேராசிரியர் முனைவர் ரா. அழகரசன் சிறப்புரை ஆற்றினார். 03.12.21 அன்று திரைப்படப் பயிலரங்கம் இயக்குநர் திரு. ராம் அவர்களால் நடத்தப்பெற்றது. 18.04.2022 அன்று ‘மனுஷங்கடா’ என்ற திரைப்படம் திரையீடு செய்யப்பட்டது. பின்னர் அப்பட இயக்குநர் அனுஷன் குமார் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

துறையைச் சேர்ந்த 6 ஆய்வு மாணவர்களுக்கு வாய்மொழித் தேர்வு நடத்தப்பெற்று முனைவர் பட்டம் பெற்றனர். ஆங்கிலத் துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள் எழுவர் புத்தாக்கப் பயிற்சிப் பெற்றனர்.

## வரலாற்றுத் துறை

வரலாற்றுத் துறையில் 14 உதவிப் பேராசிரியர்கள், ஆறு கௌரவ விரிவுரையாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். 14 ஆய்வாளர்கள் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர். துறைத்தலைவர் பேரா.க. துரைச்சாமி பல்கலைக்கழகக் கல்லூரிகளில் பாடத்திட்டச் சீராய்வுக்குழு உறுப்பினராகவும் உதவிப் பேராசிரியர்களுக்கான CAS என்ற பதவி உயர்வுக் குழுவின் உறுப்பினராகவும் செயல்பட்டுள்ளார்.

வரலாற்றுத் துறையில் வ.உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 27.10.2021, 28.10.2021 மற்றும் 29.10.2021 ஆகிய தேதிகளில் மூன்று நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் திரு. குருசாமி மயில்வாகனன், திரு. ரெங்கையா முருகன், முனைவர் எம். திலகவதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று உரையாற்றினர். துறையில் தொடர்ந்து வாரக் கருத்தரங்குகளும் மாதக் கருத்தரங்குகள் நான்கும் நடைபெற்றுள்ளன. துறைப் பேராசியர் மே. ச. நவநீத கிருஷ்ணன் அவர்களுக்கு மலேசியாச் சுற்றுலாத் துறை, நல்லாசிரியர் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. நேபாளத்தில் நடைபெற்ற சர்வதேச ஓட்டப் பந்தயத்தில் மூன்றாம் ஆண்டு மாணவர் கெ. ஏ. ஷெல்டன் ஜான் முதலிடம் பெற்றுத் தங்கப் பதக்கம் வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

## அரசியல் அறிவியல் துறை

அரசியல் அறிவியல் துறையில் **15-12-2021-** அன்று அரசியல் அறிவியல் மன்ற துவக்க விழாவில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் "வீரயுகம் துவங்கி வெகு மக்கள் காலம் வரை" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். **22-03-2022-** அன்று வானவில் கே .ரவியின் படைப்புகள் என்ற தலைப்பில் தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. **24-03-2022-** அன்று இந்து நாளிதழின் தலைமைப் பதிப்பாசிரியர் டி. ராமகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் "சினிமாவும் அரசியலும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைப்பெற்றது. **26-03-2022, 27-03-2022** மேகாலயா மாநிலம் **University of Science and Technology** பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற **59** ஆவது அகில இந்திய அரசியல் அறிவியல் சங்கம் சார்பாக நடத்தப்பெற்ற மாநாட்டில் துறைப் பேராசிரியர்கள் முனைவர் ரெ.சிவக்குமார், முனைவர் ரா. தேவகிரண், முனைவர் என். ரமாதேவி, முனைவர் வி.பி.அம்புலிராஜா ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

துறையின் சார்பாக **1-12-2021-** அரசியலமைப்பு தின விழா மற்றும் **08-03-2022-** மகளிர் தின விழா ஆகியவை கொண்டாடப்பட்டன. அரசியல் அறிவியல் துறை மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில், மாணவர்களே உருவாக்கி வெளியிடும் வகையில் **'THE LEYCEUM'** எனும் மின்னிதழ் ஜனவரி **2022** முதல் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. இந்தக் கல்வி ஆண்டில் துறைப் பேராசிரியர் ரெ.சிவக்குமார் மற்றும் **6** மாணவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். இதில் ஏ. பிரகாஷ் சிறந்த ஆய்வேட்டிற்கான பேராசிரியர் இரா. தாண்டவன் அறக்கட்டளை பரிசு ரூபாய் **10,000** பெற்றுள்ளார். அரசியல் அறிவியல் துறையைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு திறன்வளர் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றிப் பெற்றுள்ளனர்.

## பொது நிருவாகத்துறை

பொது நிருவாகத் துறையில் 16.12.2021 அன்று பொது நிருவாகச் சங்கத் தொடக்க விழா நடைபெற்றது. அதில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் செயற்கைப் பிரிவு இயக்குனர் டாக்டர் ஆர். ஆறுமுகம் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். துறையில் வாரக் கருத்தரங்குச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பொது நிருவாகத் துறையின் சார்பில் மாநில மனித உரிமைகள் ஆணையக் குழுவின் கருத்தரங்கு, தொழில் முனைவோருக்கான கருத்தரங்கு, தமிழ்நாடு நீர் வழங்கல்

வாரியத்தின் கருத்தரங்கு நடைபெற்றுள்ளன. துறை மாணவர்கள் கல்லூரி அளவிலும் மாநில, தேசிய அளவிலும் நடைபெற்ற கலைப் போட்டிகளில் பங்கேற்று வெற்றிக் கோப்பைகளைப் பெற்று வந்துள்ளனர். துறைத்தலைவர் Dr. பி. சுஜாதா அவர்கள் என்சிசி கிழக்குத் தாம்பரம் பொது நிர்வாகத் துறையில் ஆலோசனைக் குழு உறுப்பினராக 06.05.2022 அன்று முதல் இருந்து வருகிறார். NSS திட்ட அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மௌலானா ஆசாத் தேசிய உருது பல்கலைகழகத்தின் அரசியல் அறிவியல் துறை மற்றும் பொது நிருவாகத்துறை இணைந்து நடத்தியப் புத்தாக்கப் பயிற்சியில் 14 நாட்கள் இணைய வழியாகப் பங்கேற்றுச் சிறப்பித்துள்ளார். தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்திற்கு 'நிருவாகக் கொள்கைகள்' எனும் புத்தகத்தை எழுதி வழங்கியுள்ளார். இந்திய அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆணையம் நடத்திய 'அரசியல் அறிவியலின் முன்மொழி அடிப்படைச் சொற்களஞ்சியம்' எனும் கருத்தரங்கில் பங்கேற்றுள்ளார்.

பொது நிருவாகத் துறை உதவிப் பேராசிரியர் டாக்டர் அன்பு ஆறுமுகம் இரண்டு நூல்களை எழுதி வெளியுட்டுள்ளார். ஆராய்ச்சித் திட்டம் ஒன்றினையும் மேற்கொண்டுள்ளார். மூன்று விருதுகளைப் பெற்றுள்ளார்.

## வணிகவியல் துறை

வணிகவியல் துறையில் 50 இளநிலை, 36 முதுநிலை மாணவர்கள், 1 ஆய்வியல் நிறைஞர், 33 முனைவர் பட்ட ஆய்வாளர்கள் உள்ளனர். 2020 – 2021 ஆம் கல்வியாண்டில் 100% தேர்ச்சியை மாணவர்கள் பெற்றுள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகம் 18.02.2022 – 03.03.2022 ஆகிய நாள்களில் நடத்திய புத்தாக்கப் பயிற்சியில் இத்துறைப் பேராசிரியர் முனைவர் பி. மரியாதாஸ் கலந்து கொண்டார். முனைவர் L. CESIS DASTAN “MANAGEMENT ACCOUNTING” என்ற தனது புத்தகத்தின் 5 ஆம் பதிப்பினை மார்ச் 2022 இல் வெளியிட்டார். துறைப்பேராசிரியர்கள் பல்வேறு பன்னாட்டுக் கருத்தரங்குகள், தேசியக் கருத்தரங்குகள், பயிலரங்குகள் ஆகியவற்றில் பங்கேற்றுள்ளனர்.

### வணிகவியல் துறை (மாற்றுத் திறனாளிகள் பிரிவு)

ஆசிய கண்டத்திலேயே முதன் முதலாகச் செவித்திறன் குறைபாடு மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவர்களுக்காக 2007 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால், தமிழக அரசின் சமூக நலன் மற்றும் சத்துணவு துறை உதவியுடன் தொடங்கப்பட்டதுதான் நமது கல்லூரியின் வணிகவியல் துறை மாற்றுத் திறனாளிகள் பிரிவு ஆகும்.

2020 ஆம் ஆண்டில் News7 செய்தித் தொலைக்காட்சி நடத்திய மாற்றுத் திறனாளிகளுக்கான கற்றல் விருது போட்டியில் நமது கல்லூரி முதலாவது இடம் பிடித்து விருது பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசு வழங்கிய நவீனக் கைப்பேசி கொரணா காலங்களின் இணையவழி வகுப்பில் மாணவர்களுக்கு உறுதுணையாக இருந்தது. துறையின் சார்பாக 24.04.2022 அன்று காசநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. 23.9.2021 அன்று பன்னாட்டுச் சைகை மொழி தினமும் 03.12.2021 அன்று மாற்றுத்திறனாளிகளுக்கான தினமும் கொண்டாடப்பட்டன. 2021-22 ஆம் கல்வி ஆண்டில் புதுத் தில்லி இராமானுஜம் கல்லூரியில் கற்றல், கற்பித்தல் மையம் நடத்திய புத்தாக்கப் பயிற்சியில் துறைத்தலைவர் முனைவர் பொ. முகேஷ்தேவன் கலந்து கொண்டு 15 நாட்கள் பயிற்சிப் பெற்றுள்ளார். துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் குமார் அவர்கள் 2021 ஆம் ஆண்டு சிறப்புக் கல்வியியல் பட்டம் பெற்றுள்ளார். கல்லூரி மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்று வெற்றிப் பெற்றுள்ளனர்.

### கணிதத்துறை

கணிதத்துறையில் 30.12.2021 அன்று நடைபெற்ற ராமானுஜன் நாள் விழாவில் செவாலியர் விருது பெற்ற பத்மஸ்ரீ பேராசிரியர் பாலசுப்பிரமணியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். துறையில் மூன்று கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. 23.4.2022 அன்று நடைபெற்ற முன்னாள் மாணவர்கள் கூட்டத்தில் 50 பேர் கலந்து கொண்டு துறையின் ஆய்வகக் கட்டமைப்பினை மேம்படுத்த உதவுவதாக உறுதியளித்துள்ளனர். சென்னைப் பல்கலைகழகத்தில் நடைபெற்ற பல்கலை மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான 100 நாள் பயிற்சித் திட்டத்தில் முனைவர் ஏ. சாந்தகுமாரி முனைவர் ஜி. தமிழரசி ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிப் பெற்றுள்ளனர். இந்தக் கல்வி ஆண்டில் மூன்று மாணவர்கள் பொது வாய்மொழித் தேர்வு முடித்து முனைவர் பட்டம்

பெற்றுள்ளனர். ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற தென் மண்டல தேசிய அளவிலான டென்னிஸ் போட்டியில் தமிழகத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு முதுநிலை இரண்டாம் ஆண்டு மாணவர் சாயிஷா முதலிடம் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

## கணினி அறிவியல் துறை

கணினி அறிவியல் துறையில் 22.12.2021 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் சென்னை Aspire Systems India (p) Ltd, இணை மேலாளர் திரு எஸ். பாலாஜி கலந்து கொண்டு 'மாணவர்களின் அறிவுத்திறன் மேம்பாடு' எனும் தலைப்பில் உரையாற்றினார். நமது துறையில் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்கள் அரசு வழங்கிய நவீனக் கைப்பேசியைப் பெற்றுப் பயன் பெற்றனர். கணினி அறிவியல் துறைப் பேராசிரியர்கள் என். மருதாசலம், ஆர். வேல்முருகன் ஆகிய இருவரும் சிறந்த ஆசிரியருக்கான விருதினையும் கௌரவ விரிவுரையாளர் என். வினோத் 'சமூக சேவகர்' விருதினையும் பெற்றுத் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். நடப்புக் கல்வியாண்டில் கணினி அறிவியல் துறையில் எட்டு ஆராய்ச்சி மாணவர்கள் முனைவர் பட்டமும் 9 மாணவர்கள் எம்ஃபில் பட்டம் பெற்றுள்ளனர். துறைப் பேராசிரியர்கள் பலரும் பணி மேம்பாட்டுப் பயிற்சியினை முனைப்போடு கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர். பலரும் விளையாட்டு மற்றும் திறன் வளர் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றுவந்துள்ளனர்.

## இயற்பியல் துறை

இயற்பியல் துறையில் 2021-2022 ஆம் கல்வி அண்டில் இயற்பியல் வல்லுநர்களைக் கொண்டு மூன்று கருத்தரங்குள் நடைபெற்றுள்ளன. அதில் இந்திய ஒன்றிய அரசின் IMSc இயக்குநர் பேராசிரியர் ரா. வேலுச்சாமி, இங்கிலாந்து எடின்பர்க் பல்கலைக்கழகம் முனைவர் வி. ரவீந்திரன், தருமபுரி மண்டல மேனாள் கல்வி இயக்குநர் முனைவர் ஏ. சுப்பையா பாண்டி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றி உள்ளனர். பேராசிரியர் ஒருவர் புத்தாக்கப் பயிற்சிப் பெற்றுள்ளார். துறைப் பேராசிரியை ஒருவர் ISPA விருது பெற்றுக் கல்லுரிக்கும் துறைக்கும் பெருமை சேர்த்துள்ளார். இயற்பியல் துறை மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்றுப் பரிசு பெற்றுள்ளனர். இயற்பியல் துறைக்கு இந்த ஆண்டில் ஐம்பாதாயிரம் மதிப்புள்ள புத்தகங்கள் மற்றும் ஆய்வகக் கருவிகளை நன்கொடையாளர்கள் வழங்கியுள்ளனர்.

## உளவியல் துறை

உளவியல் துறையில் 29.07.2021 முதல் 12.08.2021 வரை முதுநிலை மாணவர்களுக்கான பயிலரங்கம் ‘வாழ்க்கை திறன்கள்’ எனும் தலைப்பில் துறைத்தலைவர் டாக்டர் சுஜாரிதா மாக்டலின் தலைமையில் டாக்டர் அ. மலர்க்கொடி ஒருங்கிணைப்பில் நடைபெற்றது. உளவியல் சங்க தினத்தை முன்னிட்டு 31.03.2022 அன்று துறைகளுக்குயிடையிலான போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசு வழங்கப்பட்டன. 13.04.2022 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் ஹைதராபாத் ஐஐடி யின் தொழில் முனைவு மற்றும் மேலாண்மைத் துறைத்தலைவர் டாக்டர் கணேஷ் மற்றும் சென்னையைச் சேர்ந்த திருமதி ஜெபமணி இருவரும் கலந்து கொண்டு மாணவர்களிடத்தில் உளவியல் தொடர்பான பயன்கள் குறித்துக் கருத்துரையாற்றினர். 07.05.2022 அன்று 2009-2012 காலகட்டத்தில் பயின்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது.

## சமூகப் பணித்துறை

சமூகப் பணித்துறையில் மாணவர்களின் வெளிப்பாட்டை விரிவுபடுத்தும் வகையில், களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. திருவள்ளூர் மாவட்டம், மதுராந்தகம் நகரில் உள்ள தேவத்தூர் கிராமத்தில் முதுநிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்காக 2021 டிசம்பர் 15 முதல் 18 வரை கிராமப்புற முகாம் நடத்தப்பட்டது. மாணவர்கள் 23 மே முதல் 29 மே 2022 வரை ஊட்டிக்கு ஆய்வுச் சுற்றுலாவாகச் சென்று SMYRNA அறக்கட்டளை மற்றும் நீலகிரி ஆதிவாசி நலச் சங்கம் உள்ளிட்ட சமூகப் பணி நிறுவனங்களைப் பார்வையிட்டனர். சமூகப் பணித்துறையானது தெரு நாடகம் குறித்தப் பயிற்சித் திட்டத்தைத் தொடங்கி, 3 மார்ச் 2022 முதல் 5 வரை தெரு நாடகம் மற்றும் தெரு நாடகப் பயிற்சியாளர் திரு. முத்துக்குமார் அவர்களால், பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், மாணவர்கள் 5 ஏப்ரல் 2022 அன்று மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் சோஷியல் ஒர்க் (MSSW) மேம்பாட்டு மேலாண்மைத் துறையால் நடத்தப்பட்ட " கிராமபுற இந்தியாவின் எதிர்காலம் பற்றிய வருடாந்திர மாநாட்டில்" பங்கேற்றனர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சமூகப் பணித் துறையில் வாரக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. நமது மாநிலக் கல்லூரியின் வணிகவியல் துறையைச் சேர்ந்த உதவிப் பேராசிரியை டாக்டர்.மாலா அவர்களால் 25 ஏப்ரல் 2022 அன்று "தனிப்பட்ட நிதி மேலாண்மை" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

**வேதியியல் துறை**

வேதியியல் துறையில் 22.12.2021 அன்று 'Recent Advances in Chemical Research' என்ற தலைப்பில் ஒரு நாள் சர்வதேச கருத்தரங்கு நடைபெற்றது. 22.04.2022 அன்று 'Squid Sensors & Applications and Condensed Matter at Extremes' எனும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் IGCAR விஞ்ஞானிகளான திரு. பாஸ்கர் மற்றும் Dr. கலாவதி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். 25.05.2022 அன்று "பெட்ரோலிய வேதியியல் தொழில் நுட்பம்" பற்றி வேலைவாய்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைப்பெற்றது.

பேராசிரியர் Dr. K. கணேசன், மாநிலக் கல்லூரியின் முதல் இந்திய காப்புரிமை 'Antic cancer drug Molecules' என்ற தலைப்பில் டிசம்பர் 2021 இல் பெற்றுள்ளார். பேராசிரியர் Dr. B. முத்துக்குமரன், 'Stoichimetry Effects in Proton Exchange Membrane Fuel cells' என்ற தலைப்பில் இந்திய காப்புரிமைப் பெற்றுள்ளார்.

**விலங்கியல் துறை**

விலங்கில் துறையில் ஜூன் 5, 2021 - உலக சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடும் வகையில், "Vultures – Nature's Gift as Environmental Biocleaners and their Conservation" என்ற தலைப்பில் ஒரு சர்வதேச வலைதளத்தை உருவாக்கியுள்ளோம். மார்ச் 15, 2022 அன்று சென்னை ரோட்டரி கிளப்புடன் இணைந்து Zoofest 2022 எனும் நோக்கநிலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. பசுமை வளாகத்திற்கு வழி வகுக்கும் வகையில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மார்ச் 23 அன்று இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கான ஊக்கமூட்டும் உரையை IRS திரு. வி. நந்தகுமார் வழங்கினார். ஏப்ரல் 27 ஆம் தேதி "Ecdysis 2K22" என்ற கல்லூரிகளுக்கு இடையேயான zoofest நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. கவிதா என்ற மாணவி தஞ்சாவூரில் நடைபெற்ற மாநில அளவிலான தடகளப் போட்டியில் 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றார். மேலும் விலங்கியல் துறை மாணவர்கள் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் கல்ந்துகொண்டு வெற்றிப் பெற்றுள்ளனர். இந்தக் கல்வியாண்டில் ஆய்வினை முடித்து 8 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

**சுற்றுச் சூழல்**

மாநிலக்கல்லூரியின் தாவரவியல் துறை அருகேயுள்ள மருத்தவ மூலிகை தோட்டத்தில் 60 மூலிகைச் செடிகள் வைத்து புதுப்பிக்கப்பட்டது. 02.12.2021 அன்று தேசிய மாசு கட்டுப்பாடு நாளையொட்டி முதல்வர் தலைமையில் நெகிழி உபயோப்பதை தவிர்க்கும் பொருட்டு மாணவர்களிடையே விழப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. சனவரி மாதத்தில் சுற்றுச்சூழல் மற்றும் NCC ஒரங்கிணைந்து 1000 பனை விதைகளை கல்லூரி வளாகத்தில் வெவ்வேறு இடத்தில் விதைக்கபட்டன. மார்ச்22 ஆம் நாள் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் AVCEM அமைப்பின் நிறுவனர் திருமதி ருக்குமணி மோகன் கலந்துகொண்டு ‘Save Mother Earth’ எனும் தலைப்பில் உரையாற்றினார்.

**புவியியல் துறை**

புவியியல் துறையில் 27.10.2022 முதல் 30.10.2022 வரை மூன்று நாட்கள் ‘Geospatial technologies’ என்ற தலைப்பில் தேசியப் பணிப்பட்டறை நடைபெற்றது. மார்ச் 2022 இல் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் களப்பணிக்காகப் பழவேற்காடு அழைத்துச் செல்லப்பட்டனர். திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 18.04.2022 முதல் 22.04.2022 வரை நடைபெற்ற தேசியப் பயிலரங்கில் முதுநிலை மாணவர் இருவர் பங்கேற்றுள்ளனர்.

துறையைச் சேர்ந்த உதவிப் பேராசிரியர் ஒருவர் மற்றும் ஆய்வு மாணவர்கள் இரண்டு பேரும் வாய்மொழித் தேர்வு நடத்தப்பெற்று முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

**புவி அமைப்பியல்**

புவி அமைப்பியல் துறையில் முன்னாள் மாணவர்கள் அளித்த 50000 தொகையில் ஆராய்ச்சி வல்லுநர்களை வளமையர்களாகக் கொண்டு பல்வேறு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இராமநாதபுரம் அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் அனுமதியளிக்கப்பட்டத் தொகையில் தமிழ்நாடு புவி வேதியியல் துறையுடன் நமது புவி அமைப்பியல் துறை இணைந்து ஐசோடோபிக் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, நிலத்தடி நீரில் உப்புத்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முனைவர் பட்ட ஆராய்ச்சி அறிஞர்கள் 5 ஆய்வுக் கட்டுரைகள் பல்வேறு புகழ்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச இதழ்களில் வெளியிட்டுள்ளனர்.

மாணவர் நலன் சார்ந்த நிகழ்வுகள் ஒவ்வொரு வாரமும் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நுண்ணுயிரியல் மற்றும் உயிர் தொழில் நுட்பவியல் துறை**

நுண்ணுயிரியல் துறைத்தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம் தரமணி வளாகத்தில் நடந்த தேசிய கருத்தரங்கிலும் மற்றும் எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடந்த இரு நாள் கருத்தரங்கிலும் வளமையராகப் பங்கேற்று உரையாற்றியுள்ளார். துறையின் சார்பாக மே மாதம் 16, 17, 18 ஆகிய தேதிகளில் தேசிய கருத்தரங்கு, மாணவர்களுக்கிடையேயான திறன் போட்டிகள், பால் மற்றும் பால் பொருள்களுக்கான கண்காட்சியும் நடைபெற்றன. நுண்ணுயிரியல் மற்றும் உயிர் தொழில் நுட்பவியல் துறை மாணவர்கள் பல்வேறு தேசிய அளவிலான கருத்தரங்குகளில் பங்கேற்றுக் கட்டுரையை வழங்கியுள்ளனர் சிறந்த கட்டுரைகளுக்கான பரிசினையும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

## இந்தித் துறை

இந்தித் துறையில் மைதிலி சரண் குப்த் ஹிந்தி இலக்கியச் சங்கம் சங்கத்தின் தொடக்க விழா 22.12.2022 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் சென்னைப் பல்கலைக்கழக இந்திப் பேராசிரியர் முனைவர் ஶ்ரீ சரஸ்வதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார் திரு. முத்துக்குமாரசாமி இந்தித் திரைப்பட இயக்குநர் அவர்கள் கலந்துகொண்டு இந்தியாவின் வேலைவாய்ப்புப் பற்றி உரை நிகழ்த்தினார் பட்டாபிராம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையிலான போட்டிகளில் பங்கேற்று முதன்மைக் கேடயத்தைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமைசேர்த்துள்ளனர். துறைத்தலைவர் முனைவர் கோபாலகிருஷ்ணன் தனது பெற்றோர்களின் வரலாற்றினை “ஒரு எளிய மனிதனின் கதை” எனும் தலைப்பில் எழுதி வெளியிட்டுள்ளார். மேலும் ஐசிடி அகாதமி 31.08.2021 முதல் 04.09.2021 வரை நடத்திய இணைய வழிச் சான்றிதழ் படிப்பினையும் 14.02.2022 முதல் 18.02.2022 வரை நடைபெற்ற ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சியையும் பெற்றுள்ளார்

## தெலுங்குத் துறை

தெலுங்குத் துறையில் 17.12.2021 அன்று “KANDUKURI KRUTHULA SADHASSU” என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. துறைப்பேராசிரியர்கள் சென்னைப் பல்கலைக்கழகம், சென்னைக் கிறித்துவக் கல்லூரி ஆகியவை நடத்திய

பன்னாட்டுக் கருத்தரங்கங்களிலும் இணையவழிக் கருத்தரங்கங்களிலும் ஆய்வுரைகள் வழங்கியுள்ளனர். துறைப்பேராசிரியர்கள் இருவர் அனைத்திந்திய வானொலியில் உரை வழங்கியுள்ளனர். துறைப்பேராசிரியர்கள் அலிகார் இஸ்லாம் பல்கலைக்கழகம், மேற்கு வங்கத்தில் உள்ள BURDWAN பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் நடைபெற்ற புத்தாக்கப் பயிற்சிகளில் கலந்து கொண்டுள்ளனர். கல்லூரிகளுக்கிடையேயான பல்வேறு போட்டிகளை 06.04.2022 அன்று தெலுங்குத்துறை ஒருங்கிணைத்து மாநிலக்கல்லூரியில் நடத்தியது. இதில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு பரிசு பெற்றனர்.

**பொருளியல், புள்ளியியல், சமஸ்கிருதம், மலையாளம்** ஆகிய துறைகளிலும் மாணவர்கள் நலன் சார்ந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

### பொது நூலகத் துறை

கல்லூரியின் பொதுநூலகத் துறை பழமையான அரிய வகைப் புத்தகங்களைப் பாதுகாத்து அவற்றை அண்ணா நூற்றாண்டு நூலக குழுவினரால் மின் உருவாக்கம் செய்து வருகிறது. 2021 -22ஆம் கல்வி ஆண்டில் திட்டமில்லாத தலைப்பின் கீழ் ரூபாய் 92 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்து அதில் 294 புத்தகம் வாங்கப் பெற்று அனைத்துத் துறைகளுக்கும் வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசினால் வழங்கப்பட்ட நிதியில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு 10 கணினிகள் புதிதாகப் பெறப்பட்டு நிருவகிக்கப்படுகிறது.

### தேசிய மாணவர் படை

இக்கல்லூரியில் நடைபெறும் அனைத்து விழாக்களிலும் மாணவர்களிடையே ஒழுங்கு உணர்வை ஏற்படுத்தும் வகையில் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் செயல்பட்டு வருகின்றனர் என்பது பெருமைக்குரியதாகும். பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளையும் தேசிய மாணவர் படையினர் நிகழ்த்தி வருகின்றனர்.

இவ்வாறு இக்கல்லூரியின் பேராசிரியர்களும் மாணவ மாணவியரும் கல்வி மற்றும் கல்விசார்ந்த நிகழ்வுகளிலும் பங்கேற்று அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றி முத்திரை பதித்து வருகின்றனர் என்பதையும் உங்களோடு பெருமையோடு பகிர்ந்து கொள்கிறேன்.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க, இக்கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் ஐந்து பேராசிரியர்களைத் திட்ட அலுவலர்களாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. திருமழிசை கிராமத்தை தத்தெடுத்துக்கொண்டு சாலை செப்பனிடுதல், தூய்மை செய்தல், மக்களுக்குச் சுத்தம் சுகாதராரம், கல்வி அறிவின் முக்கியத்துவம் ஆகியவை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு வாரம் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.